# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2421/30 - 2025 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2025.01.31

*2421/30 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்***

பிரிவு 2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 2 இன் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 2024 பெப்ரவரி 01 ஆந் திகதிய 2369/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி, 2023, யூலை 25 ஆந் திகதிய 2342/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும், 2023 ஏப்ரல் 25 ஆந் திகதிய 2329/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான, 2023, சனவரி 11 ஆந் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினை அதனுடைய அட்டவணை I இன் (i), (ii) மற்றும் (iii) எனும் விடயங்களுக்குப் பகரமாக பின்வரும் அட்டவணையிலுள்ள விடயங்களை மாற்றீடு செய்வதன் மூலம் 2025, சனவரி 31 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்துவதற்கு இந்தக் கட்டளையின் மூலம் பணிக்கின்கிறேன்.*

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு-01.
*2025, சனவரி 31.*


1A - PG 7015 — 404 (2025/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | | | நிரல் II |
|---|---|---|---|
| (i) | மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து (MRIA) விமானம் மூலம் இலங்கையிலிருந்து புறப்படும் நபர். | சர்வதேச விமான நிறுவனமொன்று தனது செயற்பாடுகளைத் தொடங்கிய நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் நிறைவடையும் திகதி அல்லது 2025, திசெம்பர் 28, எது முதலில் வருகிறதோ அது வரை. | இலவசம் |
| (ii) | இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து (CIAR) விமானம் மூலம் இலங்கையிலிருந்து புறப்படும் நபர். | 2025.03.27 இலிருந்து 2026.03.26 வரை | ஐ.அ.டொ. 30.00 |
| (iii) | யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து (JIA) விமானம் மூலம் இலங்கையிலிருந்து புறப்படும் நபர். | 2025.02.01 இலிருந்து 2026.01.31 வரை | ஐ.அ.டொ. 30.00 |

EOG 01-0324

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.